LIFESAVING SOCIETY®
*The Lifeguarding Experts*

ஒண்டாரியோ

அன்பார்ந்த பெற்றோர்களுக்கு / பாதுகாவலர்களுக்கு,

சமீபத்தில் உங்கள் பிள்ளை பாடசாலையில் உயிர்காக்கும் சங்கத்தின் ***ஸ்விம் டு சர்வைவ்® பிளஸ்*** திட்டத்தை முடித்துள்ளது.

*ஸ்விம் டு சர்வைவ்+* ஆனது நிஜ வாழ்க்கையில் நீர்நிலைச் சூழல்களில் தப்பிப் பிழைப்பதற்கும் ஒரு நண்பருக்குப் பாதுகாப்பாக உதவுவதற்கும் தேவைப்படுகின்ற திறன்களைக் கற்றுக்கொடுக்கிறது. தண்ணீரில் பாதுகாப்பாக இருப்பதற்கு *ஸ்விம் டு சர்வைவ்+* முக்கியமாகும். இது பாரம்பரிய நீச்சல் பாடங்களுக்கு ஒரு மாற்று முறை அல்ல.

உங்கள் பிள்ளை அவனது / அவளது திறன் நிலையைக் குறிப்பிடுகின்ற ஒரு *ஸ்விம் டு சர்வைவ்+* அட்டையைப் பெற்றிருக்கும்.

- ***ஆடைகளை அணிந்துகொண்டு தண்ணீருக்கு அடியில் பல்டியடிக்க முடியும்***
- ***ஆடைகளை அணிந்துகொண்டு 1 நிமிடத்துக்கு தண்ணீரில் நடக்க முடியும்***
- ***ஆடைகளை அணிந்துகொண்டு 50 மீட்டர் நீச்சலடிக்க முடியும்***
- ***ஆடைகளுடன் ஸ்விம் டு சர்வைவ்+ தரநிலையை அடைந்திருக்கிறார்***
- ***உதவிகளை முடித்திருக்கிறார் (சிக்கலில் உள்ள ஒரு நண்பருக்கு உதவ)***
- ***உடற்தகுதிக்கான நீச்சலை முடித்திருக்கிறார்***

அட்டையில் குறிப்பிடப்பட்ட நிலை எதுவாக இருந்தாலும், உயிர்காக்கும் சங்கம் இந்தக் குறைந்தபட்சத் தரநிலைக்கு அப்பால் ***எல்லா*** பிள்ளைகளும் நீந்தக் கற்றுக்கொள்ள வேண்டும் என

உயிர்காக்கும் சங்கம் ஊக்குவிக்கிறது. தண்ணீருக்கு உள்ளேயும் தண்ணீருக்கு அருகிலும் உங்கள் பிள்ளையின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு உங்கள் ஊரில் உள்ள குளத்தில் நீச்சல் பாடம் கற்றுக்கொள்ள உங்கள் பிள்ளையைப் பதிவு செய்யுமாறு நான் உங்களை ஊக்குவிக்கிறேன். பரிந்துரைக்கப்பட்ட அடுத்த பயிற்சி நிலை பற்றித் தெரிந்துகொள்ள தயவுசெய்து உங்கள் பிள்ளையின் அட்டையின் பின்பக்கத்தில் பார்க்கவும்.

தேவைகள் கொண்ட குடும்பங்களுக்கு உதவுவதற்கு பல குளங்கள் நிதி உதவி வழங்குகின்றன. கூடுதல் தகவல்களுக்கு உங்கள் ஊரில் உள்ள குளத்தைத் தொடர்புகொள்ளுங்கள்.

திட்டம் பற்றிய மதிப்பீடு ஆன்லைனில் கிடைக்கிறது மற்றும் உங்களுடைய பின்னூட்டம் பெரிதும் வரவேற்கப்படும். இந்த மதிப்பீட்டை அணுகுவதற்கு, தயவுசெய்து www.lifesavingsociety.com என்ற உயிர்காக்கும் சங்கத்தின் வலைத்தளத்தில் **ஸ்விம் டு சர்வைவ் பிளஸ்** வலைப்பக்கத்தில் உள்ள “வளங்கள்” என்ற தலைப்பைப் பார்வையிடவும்.

உங்களுக்குக் கூடுதலான தகவல்கள் தேவைப்பட்டாலோ அல்லது இந்த உயிர்காப்புப் பயிற்சித் திட்டம் பற்றி உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தாலோ, தயவுசெய்து 416-490-8844 என்ற எண்ணில் தயங்காமல் என்னை நேரடியாகத் தொடர்புகொள்ளுங்கள் அல்லது lorig@lifeguarding.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

தங்கள் உண்மையுள்ள,



லோரி க்ரூவ்ஸ் (Lori Groves)
ஸ்விம் டு சர்வைவ் திட்டங்களுக்கான மேலாளர்

பதிவுபெற்ற அறக்கட்டளை எண்
10809 7270 RR0001

400 Consumers Road
Toronto, Ontario M2J 1P8 Canada

**தொலைபேசி: 416-490-8844**
**தொலைநகல்: 416-490-8766**
**மின்னஞ்சல்: experts@lifeguarding.com**
**www.lifesavingsociety.com**